பாதாள குழியில் விழுந்த விஜயலட்சுமி: பந்தாய் டாலாமில்

தேடும் பணி தொடர்கிறது

கோலாலம்பூர், ஆக. 28-

இந்திய பிரஜையான விஜயலட்சுமியை தேடும் பணி நேற்று தலைநகர், ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் ஐந்தாவது நாளாக தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட வேளையில், சாக்கடை கால்வாய்களை அலசுவதற்காக நீண்ட கம்பிகளையும் வளைந்து செல்லும் கேமராக்களையும் பயன்படுத்துவது பயனில்லாமல் போனது. அடுத்து பந்தாய் டாலாம் நீர் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகே தேடும் படலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டது. விஜயலட்சுமி என்று மட்டுமே இதுவரை அடையாளம் கூறப்பட்டு வரும் அம்மாது கடந்த வெள்ளிக்கிழமை ஜாலான் மஸ்ஜிட் இந்தியா, விஸ்மா யாக்கின் எதிர்புறம் பாதாள குழியில் விழுந்து காணாமல் போயுள்ளார்.

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

பாதாள குழியில் விழுந்த விஜயலட்சுமி...

இன்று வரையில் அவருக்கான தேடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

ராட்சத குழாய்களின் உதவியுடன் நீர்ப்பாய்ச்சி, கால்வாயில் உள்ள குப்பைகள் அகற்றப்பட்டன. எனினும் அதன் பிறகு வளைந்து செல்லும் கேமராக்களை பயன்படுத்தியபோது எதையும் கண்டுபிடிக்க முடியவில்லை என கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஓர் அறிக்கையில் தெரிவித்தது.

மலேசிய தீயணைப்பு, மீட்புப் படையினர், இண்டா வாட்டர் நீர் விநியோக நிறுவனம், கோலாலம்பூர் மாநகர் மன்றம் ஆகியன பந்தாய் டாலாம் நீர் சுத்திகரிப்பு ஆலைக்கு அருகே தேடும் படலத்தை தொடர்ந்துள்ளன.

இதனிடையே, ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் பாதாள குழி ஏற்பட்ட பகுதியின் முன்புறம் உள்ள நடைபாதையிலும் தேடும் பணிகள் தொடங்கியுள்ளன. அங்கு அதிர்வுகள் ஏற்படும் சாத்தியம் இருப்பதால் ஊடக பிரதிநிதிகள் அங்கிருந்து வெளியேற உத்தரவிடப்பட்டனர்.